**10.09.2024**
**CC No. 117/2023**
**PW1 : நிர்மலா**
**குறுக்கு விசாரணை**

1) எதிரி மீது நான் 2 வழக்குகள் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்குகளை தவிர எதிரியுடன் வேறு வரவு செலவு உள்ளதா என்றால் இல்லை. என் கணவருக்கம் எதிரிக்கும் வேறு வரவு செலவுகள் உள்ளதா என்றால் இல்லை. எதிரியின் குடும்ப உறுப்பினர்களை பற்றிய விபரம் தெரியுமா என்றால் தெரியும். எதிரியின் குழந்தைகள் என்ன செய்கிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. எதிரி எந்தெந்த முகவரியில் வசித்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி எந்தெந்த தேதிகளில் பணம் கேட்டார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். சாட்சி தற்போது சரியாக நினைவில்லை என்று கூறுகிறார். நான் புகார்மனு, நிரூபண வாக்குமூலம், சட்ட அறிவிப்பு ஆகியவற்றில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். பணம் கொடுத்ததாக சொல்லும் தேதிகளில் எவ்வளவு தொகை கொடுத்தேன் என்று புகார்மனு, நிரூபண வாக்குமூலம், சட்ட அறிவிப்பு ஆகியவற்றில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2) என்னிடம் காட்டப்படும் கடனுறுதிசீட்டு, வழக்கறிஞர் அறிவிப்பு ஆகியவற்றில் எந்தெந்த தேதிகளில் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்ற விபரம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டிருக்கிறது. என்னிடம் காட்டப்படும் சட்ட அறிவிப்பு சி.சி. 116/2023 ற்கு உரியதாகும். எந்தெந்த தேதிகளில் எந்த வகை ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன் என்றால் நினைவில்லை. எதிரி எதற்காக என்னிடம் பணம் கேட்டார் என்றால் முதலில் எதிரியின் மனைவி தொழில் தொடங்குவதற்காகவும், பின்னர் குடும்ப தேவைக்காகவும் இடம் வாங்குவதற்காகவும், பணம் வாங்கினார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

**சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's)**
**விரைவு நீதிபதி, காரைக்குடி**